18.08.2025

OS No: 4/2018

பி.வா.சா. 1 திரு. சுப்பிரமணியன் த/பெ பெரியசாமி.

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்சி</u>**

தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு தனித்து பாத்தியம்பட்ட சொத்து என நான் சொல்வதில் எந்த வகையில் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து தனித்து பாத்தியப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதியால் கிரையம் வாங்கப்பட்ட சொத்து அல்ல வாதிகள் 1ம் பிரதிவாதியின் தகப்பனார்களுக்கிடையே பேசிக்கொண்டதன் அடிப்படையில் 1ம்பிரதிவாதிக்கு தாவா சொத்து கிடைத்தது. மேற்படி தாவா சொத்தை நான் எந்த வருடம் கிரையம் பெற்றேன் என்றால் 2012 ம் வருடம் 9 வது மாதம் கிரையம் பெற்றேன். தாவா சொத்து சம்மந்தமாக வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி தகப்பனார்களுக்டையே 28.09.1980 வருடம் உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அவருடைய நிரூபண வாக்குமூலத்திலும், குறுக்குவிசாரணை சாட்சியத்திலும், 22.09.1996ம் தேதி உடன்படிக்கை ஏற்பட்டதாக சொல்லியுள்ளார் நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் 28.09.1980ம் தேதி உடன்படிக்கை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன். மேற்படி 1ம் பிரதிவாதி மற்றும் நான் சொல்வதை போன்று வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி தகப்பனார்களுக்கிடையே எந்தவித உடன்படிக்கையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அங்கப்பபிள்ளை தாவா சொத்து சம்மந்தமாக 09.01.1947 ம் தேதி எழுதி வைத்த உயிலை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி உயில் ஆவணத்தில் தாவா சொத்துக்கள் வாதிகள் 1ம் பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால். 1947ம் வருட உயில் ஆவணத்தில் ஆண் வாரிசுகளுக்கு மட்டும் சொத்து பாத்தியம் என சொல்லப்பட்டுள்ளது ஆனால் மேற்படி சொத்து 1952 ம் வருடம் அங்கப்பபிள்ளையால் கிரையம் வாங்கப்பட்டது என்பதால் அந்த 1947ம் வருட உயில் ஆவணம் தாவா சொத்தை கட்டுப்படுத்தாது. அங்கப்பன்பிள்ளைக்கு சித்தி கணபதி பிள்ளை என்பவர் மட்டுமே வாரிசு என்றும் மேற்படி சித்தி கணபதி பிள்ளைக்கு 3 பேர் வாரிசுதார்கள் என்றும் அந்த 3 பேர் வாரிசுதாரர்களில் வல்லத்தரசு என்பவரின் மகன் தான் 1ம் பிரதிவாதி என்றும் மற்ற வாரிசுதாரர்களில் சேர்த்திடமால் 1ம் பிரதிவரிதியிடம் மட்டுமே நான் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். வாதிகளுக்கு தெரியாமல் தாவா சொத்தை 1ம் பிரதிவாதியிடம் நான்

மோசடியாக கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தை கிரையம் பெற்ற விவரமானது வாதிகளுக்கு டிசம்பர் 2014ம் தேதியில் தான் தெரியும் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி 2014ம் வருடம் நான் கிரையம் பெற்ற விவரம் வாதிகளுக்கு தெரிந்தவுடன் என் மீது காவல் நிலையத்தில் வாதிகள் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி புகாரின் பேரில் பதியப்பட்ட வழக்கான CC No.125/2019 வழக்கில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்றால் மேற்படி பிரச்சனையை சிவில் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ள சொல்லி அந்த வழக்கு முடிக்கப்பட்டது. பி.வா.சா.ஆ.2 ல் கண்ட வழக்கு யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்தது என்றால் நியாபகம் இல்லை. எனது நிரூபண பிரமான வாக்குமூலத்தில் OS No.27/1999 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அதில் சித்தி கணபதியா பிள்ளையின் வாரிசுகள் 1980ல் ஒரு உடன்படிக்கை ஏற்டுத்தி கொண்டதாக கூறியுள்ளதை தாவா வழக்கின் வாதிகள் ஒப்புக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக சொல்வதில் அது போல் வழக்கு நடைபெற்றதா என்றால் நடைபெற்றது அதற்கான விவரம் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போன்று OS No.27/1999 என்ற வழக்கு எதுவும் நடைபெறவில்லை என்றும் அதனால் தான் அதற்கான ஆதரவு எதுவும் தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ2 ஐ சித்தி கணபதியா பிள்ளை மகனான பாண்டியன் அவர்கள் அங்கமுத்து, வல்லத்தரசு ஆகியோருக்கு எதிராக பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது போன்ற ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை. பி.வா.சா.ஆ,3 ஆவணத்தில் கண்ட வழக்கில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்றால் மேற்படி ஆவணத்தில் ஜெயராமன் மற்றும் பாண்டியன் ஆகியோருக்கிடையே நடைபெற்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது (பி.வா.சா.ஆ3 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு மேற்படி கேள்வி கேட்க்கப்பட்டு பதில் பெறப்பட்டது). மேற்படி பி.வா.சா. 3 ஆவணத்தில் கண்ட வழக்கில் ஜெயராமன் தரப்பினர் இல்லை என்றும் மேற்படி வழக்கு பாண்டியன் மற்றும் அங்கமுத்து, வல்லத்தரசு ஆகியோர்களுக்கிடையே நடைபெற்ற வழக்கு என்றும் சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3 வழக்கானது தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். OS No.27/2012 வழக்கில் தாவா வழக்கின் வாதிகள் 1980ல் நடைபெற்றதாக சொல்லும் உடன்படிக்கையை ஒப்புக்கொண்டதாக நான் சொல்வதில் மேற்படி

வழக்கானது தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் உடன்படிக்கை எதையும் தாவா வழக்கின் வாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கு சொத்து வாதிகளுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்றும் வாதிகளுக்கு தெரியாமல் மோசடியாக 1ம் பிரதிவாதியிடம் நான் கிரையம் ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் நான் ஏற்படுத்தி கொண்ட 26.09.2012 ம் வருட கிரையம் செல்லாது என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.08.18 17:56:21 +0530